2003 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் தொகுதி, நெமிலி, பனப்பாக்கம் பேரூராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பரிசீலனையில் இல்லை. பேரூராட்சிகள் துறை 1-6-1994 முதல் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம், 1920-ன்கீழ் இயங்கி வருவதால், தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் தொடர்ந்து பேரூராட்சிக்கு விரிவுபடுத்தப்படவில்லை என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 118, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

118—

கூட்டுறவு ஒன்றியம்

***3830—திரு. ப.இராஜரெத்தினம்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டத்தில் தொழில் அபிவிருத்தி செய்யும் நோக்கில் தனியாகப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் துவக்கி, வருவாய் ஈட்டிடத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் மாவட்டத்தில் தனியாகப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் துவங்க தற்போது வாய்ப்பில்லை.

திரு. ப. இராஜரெத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய ஒப்புயர்வற்ற முதல்வராம், இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம் வறட்சி மிகுந்த மாவட்டம். இங்கு தொழில் துறை வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருக்கின்ற ஒரு சூழ்நிலையிலே, பெரம்பலூர் பகுதியிலே இருந்து மாத்திரம் 192 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தினந்தோறும்

கிட்டத் தட்ட ஒரு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. ஆகவே, இதைக் கருத்திலே கொண்டும், பெரம்பலூர் பகுதி, சென்னை தேசிய நெடுஞ்சாலைப் பகுதியிலே அமைந்திருப்பதாலும், தற்சமயம் திருச்சி மாவட்டத்திலேயிருந்து பெரம்பலூர் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டிருப்பதாலும்—அந்தப் பெருமையையும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995-லே செய்து கொடுத்து, தற்சமயம் பெரம்பலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து அம்மா அவர்கள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், பெரம்பலூர் மாவட்டத்திற்கென்று வருங்காலத்திலே தனியாக ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தை அமைத்துத் தரவும், பால் பவுடர் தயாரிக்கின்ற தொழிற்சாலையை அமைத்துத் தரவும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒன்றியம் துவங்க, குறைந்தது 5 ஏக்கர் நிலம் தேவைப்படும். அதனை நிர்மாணிப்பதற்கு ரூபாய் 4 கோடி செலவாகும். உள்ளூர் பால் விற்பனை நாளொன்றுக்குக் குறைந்தது 30,000 லிட்டர் இருக்க வேண்டும். ஆனால், தற்சமயம் மாவட்டத்தில் ஒன்றியத்தின் மூலம் பால் விற்பனை எதுவும் செய்யப்படவில்லை. இத்துடன், இங்கு பெரும்பாலும் நகரப் பகுதியாக இல்லாமல், கிராமப்பகுதியாக இருப்பதால், உள்ளூர் விற்பனை துவங்கினாலும், அதில் விற்பனை ஆவதற்கு வாய்ப்பில்லை. மேலும், அருகில் திருச்சி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் செயல்பட்டு வருவதால், பெரம்பலூர் மாவட்டத்தில் தனியாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 119, திருமதி தமிழ்மொழி ராஜதத்தன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.